# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044– 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 143/மா/2023**

**நாள் : 11.07.2023**

| | | |
|---|---|---|
| திரு.K. சவேரியார்,<br>தஞ்சாவூர் | – | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்,<br>தஞ்சாவூர் மாநகராட்சி, தஞ்சாவூர் | – | எதிர்மனுதாரர் |

தஞ்சாவூர், வடக்கு வாசல், கங்காநகர் ரோடு, கல்லுக்கட்டி தெரு, கதவு எண்.27/60 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. K. சவேரியார் என்பவரின் நாளிடப்படாத மனு 22.05.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 143/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தஞ்சாவூர், வடக்கு வாசல், கங்காநகர் ரோடு, கல்லுக்கட்டி தெரு, கதவு எண்.27/60 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. K. சவேரியார் என்பவர் தனது முறையீட்டு மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

" நான் தஞ்சாவூர் மாநகராட்சியில் செயல்திறனற்ற பணியாளராக பணிபுரிந்து 60 வயது முதிர்வு பெற்று ஓய்வு பெற்றுள்ளேன். நான் ஓய்வு பெற்று 36 மாதங்கள் கடந்து விட்டன. எனக்கு இன்னும் ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய பயன்கள் வழங்கவில்லை. இது தொடர்பாக சம்மந்தப்பட்ட பொறியியல் பிரிவு அலுவலரை நேரில் சந்தித்து கேட்டபொழுது என்னுடைய பணிப்பதிவேடு அலுவலகத்தில் காணவில்லை என்று சொன்னார்கள். அதற்கு மாற்றாக நகல் பணிப்பதிவேடு தயார் செய்து கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். இந்த நகல் பணி பதிவேடு தயாரிக்கும் பணி முடிந்து ஓராண்டுக்கு மேலாகியும் எனக்கு ஓய்வூதிய பயன்கள் வழங்க உரிய, முறையான நடவடிக்கை எடுக்கவில்லை.

எனக்கு உரிய காலத்தில் ஓய்வூதிய பயன்கள் வழங்காததால் என் வாழ்வாதாரம் பாதித்து வேறு வழியின்றி வருமானம் இல்லாமல் அதுவும் குறிப்பாக நான் வேலை செய்ய முடியாத அளவிற்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு இருப்பதால் ஐந்து பிள்ளைகளோடு பசியும் பட்டினியுமாக வறுமையில் வாழ்ந்து வருகிறேன். உள்ளாட்சி நிதி தணிக்கையில் என் பென்ஷன் பேப்பரை

என்னுடைய பிறந்த தேதி மற்றும் சம்பளம் இவற்றை குறிப்பிட்டு ஆட்சேபனை எழுப்பி அடிக்கடி திருப்பி விடுகிறார்கள்.

என் பென்ஷன் பேப்பரை தணிக்கையில் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. என்னுடைய ஒரிஜினல் Service Book எப்படி தொலைந்தது எந்த சூழ்நிலையில் தொலைந்தது அந்த Service Book தொலைந்ததற்கு யார் காரணம் என்பதை இதுவரை கண்டுபிடிக்கவில்லை. பாதிக்கப்பட்டது ஒரு அடிப்படை பணியாளர் என்பதால் எந்த ஒரு அலுவலரும் எந்த ஒரு அதிகாரியும் ஒரிஜினல் சர்வீஸ் புக்கை கண்டுபிடிக்க பொறுப்பு எடுத்துக்கொள்ளவில்லை.

தொலைந்து போன ஒரிஜினல் Service Book தேடி கண்டுபிடிக்க நீண்ட காலம் ஆகலாம் என்று தெரிகிறது. அதனால் எனக்கு மேலும் சங்கடமும் தொல்லையும் தொடர்ந்து நீடிக்க நேரிடும் என்று தெரிகிறது.

ஆதலால் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ள கீழ்க்கண்ட வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி எனக்கு தற்காலிகமாக ஓய்வூதியம் மற்றும் தற்காலிக பணிக்கொடை வழங்க உரிய நடவடிக்கை உடனடியாக எடுக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகல் பணிப்பதிவேடு தயார் செய்யும் பணி சிக்கல் நிறைந்ததாக இருப்பதால் அதை செய்து முடிக்க அரசு பல ஆண்டுகள் எடுத்துக்கொள்ளும் என்ற நிலை இருக்கிறது. எனவே அரசு வழிகாட்டுதலின்படி ஓய்வூதிய விதிகளின்படி தற்காலிக ஓய்வூதியம், தற்காலிக பணிக்கொடை, நான் கடைசியாக பெற்ற அடிப்படை ஊதியத்தை ஆதாரமாகக்கொண்டு கணக்கிட்டு 01.02.2020 முதல் வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, இம்முறைமன்ற நடுவ 26.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் தஞ்சாவூர் மாநகராட்சியின் ஆணையரிடம் கோரப்பட்டது. ஆனால் மாநகராட்சி ஆணையரிடமிருந்து அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.**

**3) இந்நிலையில் இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 20.06.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 26.05.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

4) மனுதாரர் உடல்நலமின்மை காரணமாக அவரது மகனான திரு.S.விக்னேஷ்ராஜ் என்பவரை அவரது சார்பில் விசாரணைக்கு அஜராக எழுத்துபூர்வமாக ஒப்புதல் அளித்ததன்பேரில் அவர் 20.06.2023 அன்றைய விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

" மனுதாரரான எனது தந்தை K.சவேரியார் தஞ்சாவூர் மாநகராட்சியில் செயல் திறனற்ற பணியாளராக பணியாற்றி 31.01.2020 அன்று ஓய்வு பெற்று விட்டார். அவருக்கு சேர வேண்டிய ஓய்வூதியம் மற்றும் ஏனைய பணப்பயன்கள் இன்றைய நாள் வரை வழங்கப்படவில்லை. எங்களது குடும்பம் எந்தவித வருமானமின்றி மிகவும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளோம். பலமுறை மாநகராட்சி அலுவலர்களிடம் சென்று முறையிட்டும் எந்தவித பலனுமில்லை. எனவே, இனியும் காலம் தாழ்த்தாது எனது தந்தைக்கு சேரவேண்டிய ஓய்வூதியம் மற்றும் இதர பணப்பயன்கள் விரைவில் கிடைத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். எனது தந்தைக்கு உடல் நிலை இயலாத காரணத்தால் விசாரணைக்கு நான் ஆஜராக இம்முறைமன்ற

நடுவத்திற்கு அனுமதி வேண்டி அளித்துள்ள கடிதத்தையும் ஏற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) தஞ்சாவூர் மாநகராட்சி தலைமை எழுத்தர் 20.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

" மனுதாரர் தஞ்சாவூர் மாநகராட்சியில் செயல் திறனற்ற பணியாளராக பணியாற்றி 31.01.2020 அன்று ஓய்வு பெற்று விட்டார். அவருக்கு சேர வேண்டிய ஓய்வூதியம் மற்றும் இதர பணப்பயன்கள் வழங்குவது தொடர்பாக தனியரின் பணிப்பதிவேடு நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. தனியரின் பணிப்பதிவேடு மாநகராட்சியால் திரும்ப பெறப்படவில்லை. எனவே, தனியரின் பணிப்பதிவேடு புதியதாக தயார் செய்யப்பட்டது. மனுதாரரின் மனு தொடர்பாக எந்தவொரு அறிக்கையும் கொண்டு வரவில்லை. மேலும் மனுதாரருக்கு சேர வேண்டிய ஓய்வூதியம் மற்றும் இதர பணப்பயன்கள் ஒரு மாதத்திற்குள் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) மனுதாரரின் மனு, அவரது சார்பாக அவரது மகன் அளித்துள்ள வாக்குமூலம், தஞ்சாவூர் மாநகராட்சியின் தலைமை எழுத்தரின் வாக்குமூலம், ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

31.01.2020 அன்று ஓய்வு பெற்று மூன்று ஆண்டுகளாகியும் ஓய்வூதியம் மற்றும் ஏனைய பணப்பயன்கள் இன்றைய நாள்வரை வழங்கப்படவில்லை என மனுதாரர் தனது புகாரில் தெரிவித்துள்ளார்.

" மாநகராட்சி தலைமை எழுத்தர் தனியரின் பணிப்பதிவேடு நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. அப்பணிப்பதிவேடு தஞ்சாவூர் மாநகராட்சியில் திரும்ப பெறப்படவில்லை. புதிய பணிப்பதிவேடு தனியருக்கு உருவாக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு சேரவேண்டிய ஓய்வூதியம் மற்றும் இதர பணப்பயன்கள் ஒரு மாத காலத்திற்குள் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

7. The Ombudsman shall perform all or any of the following functions, namely:-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) pass an order on the proved allegation in the following manner, namely

(a) Xx
(b) Xx

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any Officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules

மற்றும்

பிரிவு 12 (1) The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences in the following manner, namely:-

(a) xxxx
(b) xxxx
(c) refer the complaint to the appropriate authority to take disciplinary actionfor willful negligence or dereliction of duty of any officer or employee of the local bodyன்படி

பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

வயது முதிர்வு காரணமாக ஓய்வுபெற்ற தனக்கு, தனது ஓய்வூதியப் பலன்கள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை என மனுதாரர் புகார் தெரிவித்தும் அதனை மனிதாபிமான முறையில் மனுதாரரின் கோரிக்கையை நிவர்த்தி செய்திட மாநகராட்சியினர் முயலவில்லை. இத்தகைய செயல் தஞ்சாவூர் மாநகராட்சி அலுவலர்கள் சாதாரண பாமர மக்களை எவ்வாறு நடத்துகின்றனர் என்பதை வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

செயல் திறனற்ற பணியாளராக பணியாற்றி ஓய்வு பெற்ற மனுதாரர் திரு K.சவேரியார் ஓய்வூதியம் தொடர்பான அறிக்கையினை விசாரணைக்கு ஏதுவாக அனுப்பிட கோரியும் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் அறிக்கை ஏதும் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பாததும் மேலும் விசாரணை அன்றும் யாதொரு அறிக்கையையும் அளிக்காததும் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் இம்முறைமன்ற நடுவத்தை உதாசீனப்படுத்துவதாகவே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. தஞ்சாவூர் மாநகராட்சியின் ஆணையரின் இச்செயல் வன்மையாக கண்டிக்கத்தக்கது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மக்கள் அளிக்கும் புகார்களை எவ்வித காலதாமதமின்றி உடனடியாக தீர்த்து வைக்க உறுதி செய்திட வேண்டும் என வருவாய்த்துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்கள். மக்கள் பணிகளில் எவ்வித தாமதமோ தேவையற்ற சுணக்கமோ செய்யக்கூடாது என்று அரசு விதிகளும் அறிவுரைகளும் இருந்தபோதிலும் இதுபோன்ற தவறுகளை செய்யும் அரசு ஊழியர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுத்தல் அவசியம். இச்சூழ்நிலையில், ஓய்வூதியர் திரு K.சவேரியார் அவர்களுக்கு 3 ஆண்டுகள் கடந்தும் ஓய்வூதிய பலன்கள் வழங்க உரிய நடவடிக்கை எடுக்காத சம்மந்தப்பட்ட தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் மற்றும் இதர சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராக பொறுப்பான அலுவலர்களை அனுப்பிடவும் விசாரணைக்கு தேவைப்படும் உரிய விபரங்களுடன் இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகவும் தேவையான அறிவுரையை சுற்றறிக்கையின் வாயிலாக அனைத்து மாநகராட்சி ஆணையர்களுக்கும் அனுப்பிட நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

மனுதாரர் திரு K.சவேரியார் என்பவருக்கு சேர வேண்டிய ஓய்வூதிய மற்றும் இதர பணப்பயன்களை வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு ஒரு மாத காலத்திற்குள் வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்கவும் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை இம்முறைமன்றத்திற்கு 30 நாட்களுக்குள் அனுப்பி வைக்குமாறும் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். இவ்வாணையின் நகல் மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம் மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு தகவலுக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

The Commissioner's, Thanjavur Corporation, attitude to this issue is condemned by this Forum. An employee who retired in January 2020 has not been assigned his pension for 3 years and more till date. This is cruel, inhuman and unjustified on the part of the Local Body, the Thanjavur Corporation. This kind of apathy, perverse indifference and inaction on the part of Corporation brings bad reputation to the image of the Corporation as well as Local Administration by a Government that stands in the vanguard of providing exemplary services to the citizens. A copy of the orders is being sent to Honorable Chief Minister's office and Government in MAWS Department for information to see how a Local Body is callous and thick-skinned in settling the pension of a retired employee for more than three years that is extremely reprehensible and indefensible. That the Commissioner has the audacity of not sending any report from his office speaks volumes of his lack of interest in the welfare of the Local Body's employees themselves. The DMA is directed to pull up the Commissioner severely and ensure that the directions of this Forum are complied with in a period of one month as undertaken by the Head clerk of the Corporation in his deposition before the Forum. Severe disciplinary action should be taken against all the official delinquents involved in this brazen and inordinate delay. If the petitioner employee challenges this injustice before the Judicial Forum like the High Court, the Local Body may have to bear the interest also for the delay besides tarnishing the image of the Corporation. Hon'ble Chief Minister's fervent directions seen in the media that the Government machinery should lose no time in redressing the grievances of the citizens especially the deprived and downtrodden have been thrown to the winds by the stony act of the Thanjavur Corporation in the matter.

2023–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 11–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு K.சவேரியார்,
   எண்.27/60, கல்லுகட்டி தெரு,
   கங்காநகர் ரோடு,
   வடக்குவாசல்,
   தஞ்சாவூர் ர் 613 008.

2. ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
தஞ்சாவூர்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

4. இணைஇயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.

மாண்புமிகு முதலமைச்சரின் செயலர்–2,
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம்,
தலைமைச்செயலகம்,
புனித ஜார்ஜ்கோட்டை,
சென்னை – 600 009.

அரசு முதன்மைச்செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச்செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை – 600 009.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்(முகூபொ)